சிறு குறிப்பு

# அரசியல் பழிவாங்கல் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு பாராளுமன்ற அனுமதியை நாடும் தீர்மானம்

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

***ஏப்பிரல் 19, 2021***- ஏப்பிரல் 9 ஆம் திகதி, 2021 அன்று, பிரதம மந்திரி மகிந்த ராஜபக்ச, ஜனவரி 8ஆம் திகதி, 2015 இலிருந்து நவெம்பர் 16ஆம் திகதி, 2019 வரையான காலப்பகுதியில் அரசியல் பழிவாங்கல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்கான 'விசாரணை ஆணைக்குழுவின்' (The CoI) பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு அனுமதியைக் கோரும் ஒரு தீர்மானத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். இப்பிரேரணை இந்த வாரம் பாராளுமன்றத்தில் விவாதிக்கப் படுவதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

விசாரணை ஆணைக்குழு ஜனவரி 9 ஆம் திகதி, 2020 அன்று ஸ்தாபிக்கப்பட்டதுடன்[1] அதன் இறுதி அறிக்கை ஜனாதிபதியிடம் டிசம்பர் 8ஆம் திகதி, 2020 அன்று கையளிக்கப்பட்டது. விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் மற்றும் விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளை ஜனவரி 18, 2021[2] அன்று அமுல் படுத்துவதற்குமாக அமைச்சர்களின் அமைச்சரவையின் அனுமதி அளிக்கப்பட்டது. அதற்கமைய, ஜனவரி 29ஆம் திகதி, 2021 அன்று விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு ஒரு விசேட ஜனாதிபதி ஆணைக்குழு, ஜனவரி 29ஆம் திகதி, 2021 அன்று ஸ்தாபிக்கப்பட்டது.[3]

---

[1] ஜனவரி 09, 2021 திகதியிட்ட அதி விசேட வர்த்தமானி இல.2157/44 , <http://documents.gov.lk/files/egz/2020/1/2157-44_E.pdf> இணையத்தள முகவரியில் கிடைக்கப் பெறும்.

[2] 18.01.2021 திகதியின் பாராளுமன்றத் தீர்மானம் <http://www.cabinetoffice.gov.lk/ cab/index.php?option=com_content&view=article&id=16&Itemid=49&lang=en&dID=10884> எனும் இணையத்தள முகவரியில் கிடைக்கப் பெறும்.

[3] ஜனவரி 29, 2021 திகதியிட்ட அதி விசேட வர்த்தமானி இலக்கம் 2212/53, <http://www.documents.gov.lk/files/egz/2021/1/2212-53_E.pdf> , எனும் இணையத்தள முகவரியில் கிடைக்கப் பெறும்.

விசாரணை ஆணைக்குழு அறிக்கையின் உருப்படி இல.8 (ஊழலுக்கெதிரான குழு தொடர்பானது) இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரதிவாதிகள் பற்றி புலன்விசாரித்து மற்றும் அவர்கள் குடியியல் உரிமைகள் இழத்தலுக்குள்ளாக்கப்படல் வேண்டுமா தொடர்பான பரிந்துரைப்பதற்கு விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு ஆணைப்படுத்தப்பட்டது. ஏப்பிரல் 9 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம், விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்ட 8ஆம் இலக்க உருப்படி தவிர்த்து, 9ஆம் மற்றும் 10ஆம் இலக்க உருப்படிகளில் குறிப்பிடப்பட்ட தீர்மானங்கள் மற்றும் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு பாராளுமன்ற அனுமதியை நாடுகிறது.

இது, அமுல்படுத்தலுக்காக, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைத்தல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு, பொதுச் சேவை ஆணைக்குழு, பொலிஸ் மா அதிபர், சம்பந்தப்பட்ட அமைச்சுகளுக்குப் பொறுப்பான அமைச்சர் மற்றும் அமைச்சுகளுக்கான செயலாளர்கள் உட்பட, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு 9ஆம் இலக்க உருப்படியிலுள்ள முறைப்பாடுகள் தொடர்பாக ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் மற்றும் பரிந்துரைகள் என்பவற்றைக் குறித்துரைப்பதை உள்ளடக்கும்.

சமர்ப்பிக்கப்பட்ட இத்தீர்மானம், பொலிஸ் அதிகாரிகள், சட்டத்தரணிகள், சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதிகாரிகள், சாட்சிகள் மற்றும் வழக்குகளில் சம்பந்தப்பட்ட ஏனையவர்கள் மேல் குற்றவியல் வழக்குத்தொடர்தலை முன்னெடுப்பதற்கு பாராளுமன்ற அனுமதியை நாடுகிறது. அத்தோடு, நீதித்துறையின் சுயாதீனம் மற்றும் சட்டவாட்சி என்பவற்றை பயனுறுதியற்றதாக்கி, தற்போது நீதிமன்றங்களிலுள்ள பல்வேறு வழக்குகளைத் தள்ளுபடி செய்வதற்குமான அனுமதியையும் இத்தீர்மானம் நாடுகிறது.

தீர்மானம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு மற்றும் அதன் பயனான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படின், இது சட்டம் மற்றும் அரசியல் ஆகிய இரு ரீதியிலுமான பின்விளைவுகளைக் கொண்டிருக்கும். இந்த சிறு குறிப்பில், இத்தகைய தீர்மானம் மற்றும் அதன் பின்விளைவு நடவடிக்கைகளின் பாதிப்பு பற்றி மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (மா.கொ.நி) விளக்கங்களைச் சுருக்கமாக மேற்கொள்கிறது. விசாரணை ஆணைக்குழு, விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு மற்றும் அவற்றின் பரந்தளவிலான தாக்கம் என்பவற்றைக் குறிப்பிடும் ஒரு அறிக்கையையும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் விரைவில் வெளியிடும்.

**நீதித்துறையின் சுயாதீனம்**

நீதித்துறையானது பரிசீலனைக்கு உட்பட்ட காலத்தில் ஒரு சுயாதீனமான மற்றும் பக்கச்சார்பின்றிய வகையிலுமாக அதன் கண்டறிதல்களுக்கு வரவில்லையெனக் கூறும் ஒரு தவறான கருத்து விசாரணை ஆணைக்குழு, விசேட ஜனாதிபதி ஆணைக்குழு மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட இத் தீர்மானம் என்பற்றின் மத்தியில் காணப்படுகின்றது. இது, நீதிமன்றங்கள் மற்றும் நியாயசபைகள் ஆகிய இரண்டினதும் சுயாதீன செயற்பாடுகள், அதே போன்று சட்ட முறைமையில் மக்கள் வைத்துள்ள நம்பிக்கை என்பவற்றுக்குப் பாதகமானது. விசாரணை

ஆணைக்குழுவின் கண்டறிதல்களுக்கு, பயனுறுதி அளிக்கப்படுவதாக இருப்பின், நீதித்துறையின் தீர்மானங்கள் நீதிமன்ற முறைமைக்கு வெளியேயான ஒரு செய்முறையில் மீள்மதிப்பீடு செய்யப்படுவதாக இதுவமையும். இது முன்னொருபோதும் இல்லாத நடவடிக்கையென்பதுடன், அரசியலமைப்பின் படி, நீதிமன்றங்கள்[4] ஊடாக அப்பியாசிக்கப்படும் மக்களின் நீதி அதிகாரம், அவர்களின் இறையாண்மையை மீறுகின்றதாக அமையும். நிறைவேற்றதிகாரத்தினால் நீதித்துறையை பாதிப்புறச் செய்வதற்கான அண்மைய முயற்சி இதுவென்பதை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமும் கவனத்தில் கொள்வதுடன் அரசாங்கத்தின் ஒவ்வொரு அங்கமும் சுயாதீனமாக செயற்படுவதை உறுதிசெய்வதற்கு இது உறுதியாக எதிர்க்கப்படல் வேண்டும்.

மேலும், இது சட்ட அமுலாக்கம் மற்றும் நீதித்துறை என்பவற்றில் பொதுவாக பரந்த பின்விளைவுகளைக் கொண்டிருப்பதுடன் சுயாதீனமாக செயற்பட வேண்டிய அமைப்புகளை மேலும் அரசியல்மயப்படுத்தும். இந்த செயற்பாடு, புலன்விசாரணையாளர்கள் மற்றும் வழக்குத்தொடருனர்கள் தங்களது கடமைகளை மேற்கொள்வதற்கு எதிராக அரசியல் ரீதியாக ஊக்கப்படுத்தப்பட்ட செயல்களுக்கான கதவைத் திறந்து விடும். இது, அரசியல் செல்வாக்குக் கொண்ட ஆட்கள் சம்பந்தப்பட்ட அனைத்து தற்போதைய மற்றும் எதிர்கால புலன்விசாரணைகளை மறைத்து, புலன்விசாரணையாளர்கள் மற்றும் வழக்குத்தொடருனர்கள் மத்தியில் ஓர் அச்சம் மற்றும் முடக்க நிலையை ஏற்படுத்தும். இது பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் மீது ஒரு மோசமான பாதிப்பைக் கொண்டிருக்கும் என்பதுடன் பழிவாங்கல் அச்சம் காரணமாக முன்வருவதிலிருந்து அவர்களைத் தடுக்கும்.

மேலும், தகுதிவாய்ந்த ஒரு நீதிமன்றத்தின் கண்டறிதல்களை தவறென்று எதிர்ப்பது அரசியலமைப்பில் பாதுகாக்கப்பட்டதும் மற்றும் நீதிமன்றங்களால் நிலைநாட்டப்பட்டதுமான நியாயமான விசாரணை மற்றும் உரிய செய்முறைகளின் மதிப்பைக் குறைப்பதாகவும் அமையும்.

**செய்முறைமையின் அரசியல்மயப்படுத்தப்படுதல்**

அரசியல் பழிவாங்கல் சம்பவங்களை இல்லாதாக்குவதை நாடுவதற்குப் பதிலாக, விசாரணை ஆணைக்குழு தானே அரசியல்மயப்படுத்தப்படுதலின் விமர்சனங்களுக்கு உள்ளாகுவதை மா.கொ.நி அவதானிக்கிறது. அரசியல் பழிவாங்கலின் கண்டறிதல்களை அறிவதில் கடைப்பிடித்த நடைமுறை, அதன் ஆணை, மற்றும் கண்டறிதல்கள் என்பன பல்வேறு பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஏனையவர்களாலும் விமர்சிக்கப்பட்டு சவாலுக்கும் உட்படுத்தப்பட்டது.

[4]உறுப்புரை 4 (இ) ‘‘மக்களது நீதிமுறைமைத் தத்துவமானது, பாராளுமன்றத்தினாலும் அதன் உறுப்பினர்களினதும் சிறப்புரிமைகள், விடுபாட்டுரிமைகள், தத்துவங்கள் என்பன பற்றிய கருமங்களின் விடயத்தில் தவிர, அரசிலமைப்பினால் உருவாக்கப்பட்டு ஸ்தாபிக்கப்பட்ட அல்லது அரசியலமைப்பினால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது சட்டத்தினால் உருவாக்கப்பட்டு ஸ்தாபிக்கப்பட்ட நீதிமன்றங்கள், நியாயசபைகள், நிறுவனங்கள் ஆகியன மூலம் பாராளுமன்றத்தினால் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்; பாராளுமன்றத்தினதும் அதன் உறுப்பினர்களினதும் சிறப்புரிமைகள், விடுபாட்டுரிமைகள் தத்துவங்கள் என்பன பற்றிய கருமங்களினால் மக்களின் நீதிமுறைத் தத்துவமானது, பாராளுமன்றத்தினால் சட்டத்திற்கிணங்க நேரடியாகப் பிரயோகிக்கப்படலாம்’’

உரிய செய்முறை தொடர்பான கரிசனைகள், அதன் சட்ட ஆணைக்கு வெளியே செயற்படுதல், மற்றும் அரசியல் விடயங்கள் சம்பந்தமான அனைத்து நீதிக் கண்டறிதல்களையும் ஏறத்தாழ முற்றிலுமாக மீள்மாற்றுதல் உட்பட பல விடயங்கள் கவனத்தை எழுப்புகின்றதை மா.கொ.நி குறித்துக் கொள்கின்றது. இது, விசாரணை ஆணைக்குழுவின் அரசியல்மயப்படுத்துல் தொடர்பாக விமர்சனங்களுக்கு வழிவகுத்தது.

**அதிகார வேறாக்கல்**

சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், அதன் சட்டபூர்வ செல்லுபடியாகும் தன்மை எவ்வாறாக இருப்பினும், ஓர் அரசியலமைப்புரீதியான ஜனநாயகத்திலுள்ள அதிகார வேறாக்கல் மற்றும் சட்டவாட்சி என்பவற்றின் கோட்பாடுகளை மீறும் வகையில், விசாரணை ஆணைக்குழு, விசேட ஜனாதிபதி ஆணைக்குழு மற்றும் பாராளுமன்றம் என்பவை நீதிச்செய்முறைகளை மேலாணை செய்யும். நீதித்துறையைக் கேள்விக்குட்படுத்துவதற்கும் மற்றும் அதன் தீர்ப்புகளை மாற்றுவதற்கும் ஆட்சித்துறைக்கு இயலுமாயின், இது நீதித்துறை குறைத்து மதிப்பிடப்படுவதற்கும் மற்றும் அது போன்றே மக்களின் நீதி அதிகாரம் ஆட்சித்துறையால் அபகரிக்கப்படுவதற்கும் இட்டுச் செல்லும்.

**இலகுவான குறிப்பிடுதலுக்காக உருப்படி இலக்கம் 9 இலுள்ள முறைப்பாடுகளை கீழுள்ள பட்டியல் உள்ளடக்குகிறது:**

1. அட்மிரல் வசந்த கரணாகொட மற்றும் ஏனையவர்கள் சம்பந்தப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆட்கடத்தல்கள் வழக்கு, பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் அவர்களின் படுகொலை, வசீம் தஜுடீனின் மரணம், லசந்த விக்கிரமதுங்கவின் கொலை, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் அவர்களின் படுகொலை, வெலிக்கடைச் சிறைச்சாலைப் படுகொலைகள், பத்திரிகையாளர் பிரகீத் எக்னலிகொடவின் காணாமற் போதல் மற்றும் கீத் நொயர் ஆட்கடத்தல் போன்ற பல்வேறு குற்றப் புலன்விசாரணைகளுக்கொதிரான முறைப்பாடுகள்.
2. ‘திவி நெகும’ திணைக்களம், சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, கூட்டுறவு ஸ்தாபனம் (சதோச), ஐக்கிய அமெரிக்காவிலுள்ள இலங்கைத் தூதரகம் போன்ற பல்வேறு இடங்களில் பொது நிதிகளிலான நிதி முறைகேடுகள் மற்றும் கையாடல் குற்றச்சாட்டுகளுக்கெதிரான முறைப்பாடுகள்.
3. பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவிற்கு எதிரான ஏமாற்றுதல் மற்றும் கையாடல் குற்றச்சாட்டுகளின் புலன்விசாரணைகளுக்கெதிரான முறைப்பாடுகள்.
4. முன்னாள் அமைச்சர் ரோஹித்த போகொல்லாகமவினால் அரச நிதிகளின் கையாடல் குற்றச்சாட்டுப் புலன்விசாரணைக்கெதிரான முறைப்பாடு
5. கார்ல்டன் ஸ்போர்ட்ஸ் நெட்வேர்க் (CSN) நிறுவனம் ஆரம்பிப்பதில் பொதுச் சொத்துகளின் முறைகேடான பாவனை தொடர்பான புலன்விசாரணைக்கெதிரான முறைப்பாடு.
6. ‘தருணயட்ட ஹெட்டக் ஸ்தாபனத்திற்காக’ (Tharunyata Hetak Organisation) ஒதுக்கப்பட்ட நிதிகளின் முறைகேடான பாவனை குற்றச்சாட்டுகளின் புலன்விசாரணைக்கெதிரான முறைப்பாடு.
7. துமிந்த சில்வாவின் சிறைத் தண்டனைக்கெதிரான முறைப்பாடு

8. வித்யா கொலை வழக்கில் பிரதான சந்தேகநபர் தப்பிச்செல்ல உதவியமை தொடர்பான குற்றச்சாட்டிற்காக வட மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபரின் பணி இடைநிறுத்தத்திற்கு எதிரான முறைப்பாடு
9. அவன் கார்ட் (Avant Garde) சர்ச்சை தொடர்பான புலன்விசாரணைக்கெதிரான முறைப்பாடு
10. ரக்ன ஆரக்ஷா லங்கா (Rakna Araksha Lanka) நிறுவனம் தொடர்பான புலன்விசாரணைக்கெதிரான முறைப்பாடு
11. கடற்படைக்கு கடத்தல் தங்கம் விடுவிக்கப்பட்டமை தொடர்பான புலன் விசாரணைக்கெதிரான முறைப்பாடு
12. லிட்ரோ காஸ் (Litro Gas) வழக்கில் பொது நிதிகளின் முறைகேடான பாவனை குற்றச்சாட்டுகளுக்கெதிரான முறைப்பாடு
13. உக்ரேயினுடன் மிக் (MiG) விமான விற்பனை ஒப்பந்தம் தொடர்பான புலன் விசாரணைக்கெதிரான முறைப்பாடு
14. தேசிய லொத்தர் சபைத் தலைவர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (SLBC)/ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் (SLRC), இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்கள், முன்னாள் பாடசாலை அதிபர் உபாலி குணசேகர உட்பட பல்வேறு அரச உத்தியோகத்தர்களுக்கெதிரான ஒழுக்காற்று நடவடிக்கைகள் மற்றும் விசாரணைகள் என்பவற்றுக்கெதிரான முறைப்பாடுகள்
15. ஹையட் ரீஜன்சி (Hyatt Regency) வழக்கில் மோசடியான நிதி மாற்றங்கள் குறித்தான குற்றச்சாட்டிற்கு எதிரான முறைப்பாடு

**உருப்படி இலக்கம் 10 இலுள்ள முறைப்பாடுகள் பின்வருபவற்றை உள்ளடக்குகிறது**

1. டி.ஏ.ராஜபக்ச மன்றத்தினால் (D.A. Rajapaksa Foundation) ஒரு காணிக் கொள்வனவு தொடர்பான புலன்விசாரணைக்கெதிரான முறைப்பாடு
2. அரச நிதிகளை உபயோகித்து பொருளாதார அபிவிருத்தி முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்சவினால் மல்வானப் பிரதேசத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 16 ஏக்கர் காணிக் கொள்வனவுக் குற்றச்சாட்டு தொடர்பான புலன்விசாரணைக்கெதிரான முறைப்பாடு
3. கொழும்பு மாநகர சபை ஆணையாளருக்கெதிராக பொது நிதிகளின் முறைகேடான பாவனைக் குற்றச்சாட்டுகளுக்கெதிரான முறைப்பாடு
4. பல்வேறு குற்றச்சாட்டுகள் காரணமாக பல அரச உத்தியோகத்தர்களின் பணிநீக்கங்களுக்கெதிரான குற்றச்சாட்டுகள்